தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-8-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இளங்கலை ஆற்றல் & சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் உணவு பதன்படுத்தல் பொறியியல் துறை மாணவர்கள் நெகிழி பைகளின் தீய விளைவுகளையும், சுகாதார இடையூறுகளையும் மக்களுக்கு தெரிவிக்கும் வண்ணம் ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர். துணிப்பைகள் பயன்பாடு பற்றி விழிப்புணர்வூட்டும் வகையில் இந்நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டு, பைகள் டவுன்ஹாலில் ஆகஸ்ட்-2014 அன்று விநியோகிக்கப்படது. இது "Ecofest'14 – A New Outlook for Sustenance" என நடைபெறவிருக்கும் 8-வது தேசிய அளவிலான மாநாட்டிற்கு ஒரு முன்னோட்ட முயற்சியாக அமைந்தது.

இம்மாபெரும் நிகழ்வில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரியின் சார்பாக 100 தன்னார்வர்கள் அணி திரண்டு 2000 துணி பைகளை பொது மக்களிடம் வழங்கி ஒரு முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டனர். இவ்விடம் இவர்கள் சுற்றுப்புறத்தில் இருந்த நெகிழிகளை சேகரித்து பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தினர். இந்த நினைவுகள் பொதிந்த நன்னாளில் இம்முயற்சிக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பாராட்டுகள் பெறப்பட்டன. இறுதியில் இந்நிகழ்வு மாபெரும் சாதனையாக முடிவுக்கு வந்தது. மேலும் மக்களின் மனதில் உயர் அளவில் உணரக்கூடிய நன்மாற்றங்களை ஏற்படுத்தியது.

வேளாண் பொறியியல் துறையின் முதன்மையர், திரு.திவாகர் துரைராஜ் அவர்கள் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு.பாலாஜி கண்ணன்(உதவிப் பேராசிரியர்) அவர்களும் தன்னார்வர்களை எழுச்சியூட்டும் விதமாக உற்சாகப்படுத்தினார்கள். அதோடு இந்நிகழ்வின் பிரம்மாண்ட வெற்றிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்